ஜநவிநோதிநி.

இல. 6.] ஜூன்மீ 1877. [புஸ்த. VIII.

ஸ்ரீநகரம்.

இந்த ஹிந்துதேசத்திற்கு வடக்கெல்லையாயும், உலகிலுள்ள எல்லா மலைகளிலும் மிகப் பெரிதாயுமுள்ள இமயமலையின் சாரலில் காச்மீரம், ஸ்ரீநகரம், ஹரித்துவாரம்முதலான பல நாடுகளுண்டல்லவா? அம்மலைநாடுகளின் காட்சியும் குடிகளின் நடக்கையும் ஒருவகையல்ல; ஒவ்வோரிடத்திலும் ஒவ்வொருவிதமாக இருக்கின்றன. அங்கே பிரயாணக்காரர்கள் சுலபமாய்ப் போவதற்கு ஒழுங்காய்ச் செப்பனிட்ட பாதைகளேயில்லை. அநேகவிடங்களில் நன்றாய்த் தேய்ந்த கால்வழியுங்கிடையாது. ஸாதாரணமாய் மிதிபட்ட புற்களும், இருபக்கங்களிலும் ஒதுக்கிய பெருங்கற்களுமே வழிகாட்டியாகவிருக்கும். அதிக பயங்கரமான செங்குத்து மலைகளும் குன்றுகளும் பெரும்பள்ளங்களும் கணவாய்களும் கானாறுகளும் ஒன்றின்பின் ஒன்றாய் எங்கேபார்த்தாலும் அளவற்று நிறைந்துகிடக்கின்றன. ஆயினும் ஒன்றைப்போல மற்றொன்றிராது, அம்மலைகள் சிலவிடங்களில் ஏறுவதற்கெளிதாய்ப் புற்றரையும் பூஞ்செடிகளும் நிறைந்து, பெரும்பாறைகளும் பிளவுகளும் இல்லாமல் சமமாய்ச் சரிவாக இருக்கும். சிலவிடங்களில் கீழே பார்த்தால் கர்ப்பங் கலங்கிப்போம்படியான கிடுகிடுபாதாளமும், நுரைத்து ஓடுகிற கானாறுகளும், மரங்களும் முட்செடிகளும் அடர்ந்த பல வனாந்தரமுமாயிருக்கும். இவ்வகையான பல இடையூறுகளால், நேராக நூறடியிற்போய்ச் சேரத்தக்க இடங்களெல்லாம் நாலைந்துமைல் சுற்றிக்கொண்டுபோகத்தக்கதாயிருக்கின்றன. இப்படி ஒன்றுக்கொன்று சமீபமான இடங்களுக்குச் சுலபமாய்ப் போகத் தடையாயிருக்கின்ற கானாறுகளை, அம்மலைநாட்டார் மூங்கில் கயிறுமுதலியவைகளால் பாலங்கட்டிக்கொண்டு, கடந்துபோவதுண்டு. ஸ்ரீநகரத்துக்கு அருகில் இவ்வாறு அமைத்திருக்கிற பாலத்தின் உருவத்தைப் பக்கத்துப்படத்தில் பார்க்கலாம்.

தற்பயிற்சி

உலகத்தில் ஒவ்வொரு மனிதனுக்கும் இருவிதமான கல்விக ளுண்டு. பிறர் கற்பித்துக்கொடுப்பதனுலுண்டாவதொன்று; தானே பயிற்சிசெய்து கற்றுக்கொள்வது மற்றென்று. இவ்விரண்டினுள் பின்னது மிகவும் சிறப்பானது.

கஷ்டநிஷ்டூரங்கள் நேரிடுங்கால் அவைகளைக் கண்டு அதைரியப்பட்டு மனஞ்சோர்ந்துநிற்பவன் ஒன்றுக்கும் உதவான். எடுத்தகருமத்தை முடிக்கப் பின்வாங்காமல் ஊக்கத்துடன் முயல்கிறவன் ஒருபோதும் தவறுன்.

சுறுசுறுப்பும் சாமர்த்தியமுமுடையவர்கள்தாம் துணிந்து தைரியமாய் எப்படிப்பட்ட வருத்தத்திற்கும் பின்வாங்காமல் முயன்று, மேன்மேலும் சிறப்படைவார்கள். மந்தபுத்தியும் சோம்பலுமுடையவர்கள் வருத்தத்தைக் கண்டவுடனே நடுங்கிப் பயந்து துன்பத்திற்கிடமாவார்கள்.

"மடியுளாண் மாமுகடி யென்ப மடியிலான்
றாளுளா டாமரையி னாள்"

என்கிற நாயனார் உரையையே இதற்கு அத்தாட்சியாகக் கொள்ளலாம்.

"ஒவ்வொருவன் கற்கிற கல்வியிலும் தற்பயிற்சியினால் அதாவது, பிறருதவியின்றித் தானே பயிலுதலினால் கற்பித்துக்கொள்ளுகிற கல்வியே மிகவும் சிறந்தது" என்று ஸர் வால்டர் ஸ்காட் என்பவர் சொல்லியிருக்கிறார். முன் இருந்த ஸர் பிஞ்சமின் பிரோடி என்பவர் மேற்சொல்லிய வாக்கியத்தை அடிக்கடி நினைத்துக்கொண்டு ஆனந்தமடைவதுமல்லாமல், ஆதிமுதல் தான் தற்பயிற்சியாலேயே சிறந்த பாண்டித்தியம் சம்பாதித்துக்கொண்டதற்காகத் தன்னைத்தானே வாழ்த்திக்கொள்வது வழக்கமாம். உலகத்தில் ஸாஹித்தியங்களிலாகட்டும், சாஸ்திரங்களிலாகட்டும், இன்னும் மற்ற வித்தைகளிலாகட்டும் நன்றாய்த் தேர்ச்சிபெற்றவர்களெல்லாம் முக்கியமாய்த் தற்பயிற்சியால் தேறினவர்கள்தாம். நாம் பாடசாலைகளிலும் வித்தியாசாலைகளிலும் படிக்கிற படிப்பெல்லாம் நமக்கு வழிகாட்டியேயன்றி வேறல்ல. அவை எவ்வளவுதூரம் நமது மனதைப் பண்படுத்தி ஓயாமல் படிப்பிலேயே செல்லும்படி பழக்குகின்றனவோ, அவ்வளவுதான் அவைகளுக்குள்ள சிறப்பு. பிறர் கற்பித்துக்கொடுப்பதனுல் உண்டாகிற கல்வி, நாமே நமது புத்தியெல்லாம் ஒரே

முகமாய்ச் செலுத்தி ஓயாமல் வருந்திக்கற்கிற கல்விக்குத் தினையளவும் ஈடாகாது. நாம் நமது உழைப்பினாலேயே கற்றுக் கைக்கொண்ட கல்வி, முழுதும் நமக்கே உரியதும் ஒருநாளும் அழிவில்லாததுமான, ஒரு ஆஸ்திபோலாய்விடும். அப்படிச் சம்பாதிக்கிற கல்வியால் நமது புத்திக்கு மேன்மேலும் கூர்மையும் பளபளப்புமுண்டாகும். நாமே வருந்திக்கற்கிற விஷயங்கள் நம்மனதில் எவ்வளவு உறுதியாய்ப் பதியுமோ அவ்வளவு உறுதியாய், பிறருதவியைக்கொண்டு கற்கிற விஷயங்கள் ஒருபோதும் பதியமாட்டா. நாமே வருந்தி உழைப்பதனால் புத்திக்கு நல்ல உறுதியும் சாமர்த்தியமுமுண்டாகும். சுயமாய் வருந்தி ஒருதடவை ஒரு கடினவிஷயத்தைக் கண்டறிவோமானால், பிறகு அத்தன்மையான மற்ற விஷயங்களை எளிதில் உணரும்படியான வல்லமை தானேயுண்டாகும். முக்கியமாய் நாம் தேறுவதற்கு நம்முடைய உழைப்பும் விடாமுயற்சியுமே முதற்காரணம். அதில்லாமல் எவ்வளவு புத்தகமிருக்கட்டும், எவ்வளவு உபாத்தியாயர்களிருக்கட்டும், எவ்வளவு விஷயங்கள் முகபாடமாயிருக்கட்டும், இன்னும் எந்தெந்தத் துணைக்கருவிகளிருக்கட்டும், ஒன்றும் பயன்படாது.

தற்பயிற்சி செய்வதாலும், ஸ்வபுத்தியையே அதிகமாய் உபயோகப்படுத்தி விசேஷமாய் ஞானத்தையடையும்படி வித்தியார்த்திகளைத் தூண்டுவதனாலும் வெகு நன்மையுண்டாகுமென்பதை, நன்றாய்க் கற்றுத்தேர்ந்த உபாத்தியாயர்கள், நிராக்ஷேபமாய் அங்கீகரித்திருக்கிறார்கள். பிள்ளைகளைப் படிப்பிப்பதைவிட, அவர்களுக்குப் படிக்கவேண்டிய வழியைக் காட்டி, எடுத்த கருமத்தை அவர்களுடைய முயற்சியைக்கொண்டே முடிக்கும்படி செய்ய முயல்கிறவர்கள்தாம் தேர்ந்த உபாத்தியாயர்கள். படிப்பிக்கிறவர்கள் தம் மாணாக்கரை, பிறருதவியை எதிர்பாராமல் சொந்தமுயற்சியாலேயே தமது புத்தியை மலர்த்திக்கொள்ளும்படி அவர்களுக்குவேண்டிய வழிகளைக் காட்டி நற்புத்தி போதித்து, வேண்டியபடி உற்சாகப்படுத்திக்கொண்டிருக்கவேண்டும். இத்தன்மையான போதனைக்கு உட்பட்டுத் தற்பயிற்சிசெய்து கற்கிறவர்களே வரவர அதிகமாய்த் தேர்ச்சிபெற்று விருத்தியடைவார்கள்.

இவ்வாறு தற்பயிற்சிசெய்து தாழ்ந்த ஸ்திதியிலிருந்தவர்கள் அநேகர் பலபாஷைகளிலும் சாஸ்திரங்களிலும் பேரும்புகழும் பெற்று மேன்மையடைந்தார்களென்பதற்குப் பல உதாகரணங்களுளவாயினும் அவைகளையெல்லாம் விவரித்தெழுத இங்கு அவசரமில்லை. இவ்வகையான புத்திப்பயிற்சிக்குத் தேகப்பயிற்சி இன்றியமையாக் காரணமென்பது யாவர்க்கும் தெளிவாய்த் தெரிந்ததல்லவா? மிதமாய் வேலைசெய்தல் சவுக்கியத்திற்கு இடமாயிருப்பதுமன்றி இம்மனிததேஹத்திற்கு மிகவும் ஏற்றதாயிருக்கின்

றது. கல்வி மனதைப் பண்படுத்துவதுபோலவே, உழைப்பு சரீரத்தைப் பண்படுத்துகின்றது. வேலைசெய்யாதவர்கள் ஒருபோதும் சவுக்கியமாயிரார்கள். சரீரத்தால் உழைக்கவேண்டிய அவசியமில்லாதவர்களாயிருந்தாலும், தேஹத்தில் சுறுசுறுப்பும் உற்சாகமும் உண்டாவதற்காக விநோதமாயாவது ஏதாவது ஒரு வேலைசெய்யவேண்டுவது அவசியம். ஐரோப்பாவிலுள்ளவர்கள் வெகுவாய் தேஹசவுக்கியத்திற்காக வேட்டையாடுவதும், காடுகளில் திரிவதும், குன்றுகளில் ஏறுவதுமாகிய விநோதமான வேலைகளைச் செய்துவருகிறார்கள். பிள்ளைகளுக்கு அநேகமாய் வாலிபத்திலேயே புத்திகூர்மையும் தேஹசவுக்கியமும் உண்டாக வேண்டுமென்றே பந்தடித்தல், பந்தயமோடுதல், படகுவிடுதல் முதலிய புத்திகாரியமான பல விளையாட்டுகள் பாடசாலைகளில் உண்டாயிருக்கின்றன. நமது வாழ்நாளில் நேரிடுகிற சகல காரியசித்திகளுக்கும் தேஹசவுக்கியமே முக்கியகாரணமென்று யாவரும் அபிப்பிராயப்பட்டிருக்கிறார்கள்.

கல்விப்பயிற்சிக்கு முதலில் தேஹசவுக்கியமாகிற அஸ்திவாரம் எழுப்புவது அவசியமாயிருப்பதுமன்றி, அதன்மேல் கட்டிய கட்டடம் நன்றாய் உறுதிப்படும்படி, மேன்மேலும் ஆராய்ச்சி செய்கிற வழக்கத்தைப் புத்திக்கு அப்பியாசப்படுத்துவது இன்றியமையாக் காரியமாயிருக்கின்றது. 'முயற்சி திருவினையாக்கும்' என்னும் நீதிவாக்கியத்தை மனதிற்கொண்டவர்களுக்கு அசாத்தியமானது ஒன்றுமில்லை. ஆதலால் மாணாக்கர்கள் ஊக்கமாய் முயல்வார்களானால் அவர்களுக்குக் கைகூடாதது ஒன்றுமில்லை. பொறுத்து இடைவிடாமல் பயிற்சிசெய்யத்தக்க சக்தியை அப்பியசிப்பாராகில் யாவரும் மாட்சிபெறுவார்கள்.

"உடைய ரெனப்படுவ தூக்க மஃதில்லா
ருடைய துடையரோ மற்று."

ஒன்றுதப்பாமல் புத்தகங்களையெல்லாம் படித்துவிடுவதனால் ஒருவனும் சமர்த்தனாகமாட்டான். ஒரேவிஷயத்தில் முழுமனதையுஞ்செலுத்தி நன்றாய்க் கற்று, கற்றதெல்லாம் தமக்கு இயற்கையாய்த் தெரிந்தவைபோலாகும்படி பலதடவைகளிலும் கவனமாய்ச் சிந்தனைசெய்து மனதில் பதியச்செய்பவர்கள்தாம் ஒவ்வொருவிஷயத்திற்கும் சர்வாதிகாரிகளாவார்கள்.

வேறு கவனமில்லாமல் ஒரேமுகமாய் மனதைச் செலுத்திப் படிக்கிற படிப்புதான் செம்மைபாய்ப் பயனுண்டாக்கத்தக்கது; ஏதாவது ஒருவிஷயத்தை நாம் ஆழ்ந்து அறிந்திருப்போமானால் அதைக்கொண்டு நமக்கு நேர்ந்தவேளையில் எதுவேண்டுமானாலும் பெற்றுக்கொள்ளலாம். ஆதலால் புத்தகங்களை விநோதமாய்க் கையில் எடுத்துக்கொண்டு திரிவதும், மனவெழுச்சிக்காக மேலெழுந்த வாரியாய்க் கதைகளைப் படிப்பதும் அறிவை விருத்திசெய்ய

மாட்டார். உலகவாழ்க்கைக்கு வேண்டிய பல சங்கதிகளும் நியாயங்களும் நமக்கு வேண்டும்போது உடனே சித்தமாய்த் தோன்றும்படி அவ்வளவு நன்றாய் அப்பியாசிக்கவேண்டும். வீட்டிலே வேண்டிய பொருளைக் குவித்துவிட்டுக் கையில் ஒன்றுமில்லாமல் திரிந்தால் நாம் மிகவும் மோசம்போவோமல்லவா! ஆதலால் நாம வேண்டும்போது வேண்டியபடி மாற்றிக்கொள்ளத்தக்க பொன்கட்டி போன்ற கல்வி நமது ஆதீனத்தில் சித்தமாயிருக்கவேண்டும்; இல்லாவிட்டால் அதற்குத் தேவைநேரிடுங்காலத்தில் ஒன்றும் தோன்றாமல் விழிக்கும்படி நேரிடும்.

ஆவலும் மனவுறுதியும் வேலைகளைச் செய்துமுடிப்பதற்கு அவசியமாயிருப்பதுபோலவே தற்பயிற்சிசெய்து கல்விகற்பதற்கும் அவசியமாயிருக்கின்றது. கூடியவரையில் வாலிபத்தில் பிள்ளைகளைத் தனிச்சையாய்விட்டுக் களிக்கச்செய்து, பிறர்உதவியைத் தேடாமல் தங்கள் உதவியையே எதிர்பார்க்கும்படி வழக்கப்படுத்தினால் இக்குணங்களெல்லாம் எளிதிலே விருத்தியாகும். மிதமிஞ்சி வழி காட்டினாலும் நிர்ப்பந்தப்படுத்தினாலும் தனக்குத்தானே உதவி செய்துகொள்ளும்படியான வழக்கத்திற்குத் தடையுண்டாகும். தற்பயிற்சிசெய்தலாலாய பயன்களை அடையச் சாதாரணமாய் அநேகருக்கு அபிப்பிராயமுண்டாயினும், அதற்காக வருந்தி உழைப்பதற்கு அஞ்சி அந்தப் பெரும்பயனை இழந்துபோகிறார்கள்.

மந்தகுணமுடையவனாயினும் ஒருவன் ஊக்கமும் ஜாக்கிரதையுமுடையவனாயிருப்பனானால் அவனுக்கு வெற்றிகிடைப்பதற்கு யாதொரு தடையுமில்லை. நேர்வழியிலுள்ள ஆமை வழி தப்பியிருக்கிற முயலை வெல்லமாட்டுமல்லவா? எவ்வளவு துரிதத்தில் கற்றால் அவ்வளவு துரிதத்தில் மறந்துபோம். ஏனெனில் மந்தமாய்க் கற்பதினால் எவ்வளவு சிந்தனையும் உறுதியும் உண்டாகுமோ, அவ்வளவு சீக்கிரத்தில் கற்பதனாலுண்டாகாது.

நமக்கு வயது வந்தபிறகு நாமே வருந்தி உழைத்துக் கற்றுக்கொள்வதால் எவ்வளவு லாபமடைவோமோ, அவ்வளவு பள்ளிக்கூடங்களில் உபாத்தியாயர்கள் கற்பித்துக்கொடுப்பதனால் ஒருகாலும் உண்டாகாதென்று முன்னமே சொல்லியிருக்கிறோமல்லவா? ஆதலால் பெற்றோர்கள் பிள்ளைகளின் புத்தியை இளமையிலேயே மலரச்செய்ய விருப்பங்கொள்ளக்கூடாது. அவர்களுடைய தேகசௌக்கியத்திற்கு யாதொரு குறைவுமுண்டாகாமல் அதைச் செம்மையாய் விருத்திசெய்து நல்ல மாதிரிகளைப் பழக்கி உழைக்கவேண்டிய வழிகளைச் சீராய்க் கற்பித்து வருவார்களானால், பிள்ளைகள் தம் புத்தி தமக்கு வந்தபிறகு தம்மைத்தாமே விருத்திசெய்துகொள்வார்கள் என்பதற்கு யாதொரு சந்தேகமில்லை.

கலியாணஞ்செய்துகொள்ளல்.

இக்காலத்துப் பெற்றோர்கள் அநேகமாய்த் தமது பெண்களுக்குச் செல்வக்குடியிற் பிறந்த பிள்ளைகளையே கலியாணஞ்செய்விக்கவேண்டுமென்று அபிப்பிராயங்கொண்டிருக்கிறார்கள். கொஞ்சகாலத்திற்குமுன்னே நாடுகளில் இப்படியில்லை. சாதாரணமாய் அன்னவஸ்திரத்துக்குக் குறைவுபடாமல் வருந்தி உழைத்துச் சம்பாதித்து, சமுசாரத்தைப் போஷிக்கத்தகுந்தவனாய், நற்குண நற்செய்கையுள்ள ஒரு புருஷன் மருமகனாக வாய்ப்பானானால் அதுவே மேலானது; அதிக மேன்மை நமக்கு எங்கிருந்து வருமென்று நினைத்து, அப்பெண்கள் மேன்மேலும் விருத்தியாகும்படி அவர்களுக்குச் சம்சாரம் பண்ணவேண்டிய வழிகளையும், பிற்காலத்தில் அவர்களுக்கு முதன்மையாய்த் தெரியவேண்டிய மற்றுமுள்ள பல வேலைகளையும் நன்றாய்ப் பழக்கி வைப்பது வழக்கம். இப்போது அப்படிப்பட்ட மனிதர்களும் விசேஷமாய் இல்லை; அப்படிப்பட்ட எண்ணமும் விசேஷமாய்க் கிடையாது. 'பிற்காலத்தில் எப்படி வாய்க்குமோ? வருங்காலத்தைக் கண்டறிந்தவர்கள் யார்?

> "மனைத்தக்க மாண்புடைய ளாகித் தற்கொண்டான்
> வளத்தக்காள் வாழ்க்கைத் துணை''

என்று சொல்லுகிறபடி, இல்லறத்துக்குவேண்டிய குணங்களோடு தன்னைக் கொண்ட கணவனது வரவுக்குத் தக்க வாழ்க்கையுடைய பெண்களே இல்லறத்துணையாவார்கள்' என்று முன்னமே தெரிந்து அதற்கேற்றபடி பெண்களைப் பயிற்றுகிறவர்கள் எங்கேயோ அருமையாயிருக்கிறார்கள்.

நகரங்களிலோ முழுதும் இதற்கு மாறாகவேயிருக்கின்றது. பெருஞ்செல்வக்குடியிற்பிறந்தவர்கள்முதற்கொண்டு பிச்சைக்காரன்வரையிலுமுள்ள எல்லாப் பெண்களும் கலியாணமாய் விட்டால் உடனே தாம் ஒரு வேலையுமில்லாமல் ஒரு சிம்மாசனத்தின்மேலேறி உட்காரவேண்டுமென்று எண்ணங்கொள்ளுகிறார்கள். அற்பவேலைக்காரர்கள்கூடத் தம்முடைய பெண்கள் பணக்காரனை மணம்புரிந்து சுகமாய் வாழப்போகிறதாய் எண்ணங்கொண்டு அவர்களுக்கு அவசியமாய்த் தெரியவேண்

டிய வேலைகளைக் கற்பியாமல் தான்தோன்றியாய் விட்டுவிடு கிறார்கள். அப்படிப்பட்டவர்களுடைய பெண்களைக் கலியாணஞ்செய்துகொள்வது கெடுதியே. ஏனெனில், அந்தப் பெண்களெல்லாம் தாங்கள் சகல சம்பத்தோடு மிகவும் மேன்மையாய் வாழவேண்டுமென்று பேராசைகொண்டு, சாதாரணமான புருஷர்களைக் கலியாணஞ்செய்துகொண்டு அவர்களோடு குடித்தனஞ்செய்வதில் மிகவும் வெறுப்புற்றிருக்கிறார்கள். வீட்டுக்காரியத்திற்கு வேண்டிய வேலை அவர்களுக்குத் தினையளவும் தெரியாது. ஸம்ஸாரத்திலுள்ள பற்பல காரியங்களிலும் வெறுப்புண்டாகும்படி அவர்கள்தாமே பழக்கிக்கொண்டிருக்கிறார்கள். இதுமாத்திரமேயல்ல; அப்பெண்களுடைய பெற்றோர்கள் 'செடியாய் வணங்காதது மரமாய் வணங்குமா' என்பதைச் சிறிதும் அறியாமல், நமது குழந்தையும் காரியம் செய்கிறதாவென்று அவர்களை மரம்போல உட்காரவைப்பதுமல்லாமல், பெண்ணுக்குப் பணக்காரனாயாவது மாதம் ஆயிரம் ஐந்நூறு சம்பாதிக்கிறவனாயாவது ஒரு புருஷனைத் தேடி விவாகஞ்செய்யவேண்டும்; குழந்தை கஷ்டப்படலாமா என்று அடிக்கடி அப்பெண்கள்முன்னிலையிலேயே சொல்லிவருகிறார்கள். அவர்களே அப்படிச் சொல்லும்போது அதைக் கேட்கிற புத்தியறியாதபெண்கள் என்ன நினையார்கள்? கலியாணமானவுடனே தாங்கள் பெருத்த சீமாட்டியாய்ப்போவதாக நினைத்துக்கொள்ளுகிறார்கள். அப்படிப்பட்ட பெண்களைக் கலியாணஞ்செய்துகொள்வது பலவகைப்பட்ட தொல்லைகளையும் அனுபவிக்க, தரித்திரத்தையும் மனவருத்தத்தையும் இன்னும் பலவகைப்பட்ட சங்கடங்களையும் விலைகொடுத்து வாங்குவதாகுமேயன்றி வேறல்ல.

"மனைமாட்சி யில்லாள் கணில்லாயின் வாழ்க்கை
யெனைமாட்சித் தாயினு மில்."

ஆதலால் இப்படிப்பட்ட நடத்தைகளெல்லாம் மிகவும் பிசகானவை. இவைகளை விலக்கவேண்டுவது மிகவும் அவசியமானது. இத்தன்மையான எண்ணங்களும் நடத்தைகளும் உடையவர்கள் ஒருநாளும் அடக்கமும் விவேகமும் உடையவர்களாக மாட்டார்கள். நம்முடைய முன்னோர்கள் புத்தியிலும் விவேகத்திலும் நமக்குக் குறைந்தவர்களோ? புத்தியிலும் சாமர்த்தியத்திலும் நாம் அவர்களுக்கு ஈடாகமாட்டோம். ஆதலால்

அவர்கள் நடந்துவந்த வழக்கத்தைவிட்டு வேறுவழி தேடுவது என்றைக்காவது சரியாகுமா? இப்போது நாம் சற்றுப் பொதுவாக நிதானித்துப்பார்ப்போம். தம்மக்கள் மேன்மையாய் வாழவேண்டுமென்கிற கோரிக்கையும் அதற்குத்தக்க முயற்சியும் யாவர்க்கும் இருக்கவேண்டியது அவசியமே. இல்லாவிட்டால் எளியவர்கள் விருத்திக்கு வருவதெப்படி? அதைப்பற்றி நாம் இப்பொழுது ஆக்ஷேபிக்க வரவில்லை. வருங்காலத்தைக் கண்டறிய நாம் யோகீசுவரர்களோ? எந்தக்காலம் எப்படியிருக்குமோ; ஒருவேளை நமது கோரிக்கை நிறைவேறாமற்போனால் அப்போது என்னசெய்கிறது? ஆதலால் யாவரும் தற்காலத்தில் தாங்களிருக்கிற ஸ்திதியிலேயே தம்மக்கள் வாழ்நாள்முழுதும் இருக்கப்போகிறதாக நினைத்து, அதற்குத்தக்கபடி வேண்டிய நடத்தைகளையெல்லாம் அவர்களுக்குப் பழக்கிவருவார்களானால் பின்பு ஒருநாளும் ஏமாந்துபோம்படி நேரிடாது. நல்லகாலமிருந்து ஒருவேளை உயர்ந்த அந்தஸ்து கிடைக்குமானால் அப்போது விசேஷ மகிழ்ச்சியுண்டாகின்றது. அதற்காக அவர்கள் அதிகமாய்க் கற்றுக்கொள்ளவேண்டிய வேலையொன்றுமில்லை. முன்னே தாழ்ந்த ஸ்திதிக்கு வேண்டியவேலைகளைப் பயின்றதனால் சேதமேதாவதுண்டோ? அப்படிப்பட்டதும் ஒன்றுமில்லையே. மேலும் அதனால் உயர்ந்த அந்தஸ்துவருங்காலத்தில் தன் வேலைக்காரர்களையும் மக்களையும் சீராய்ஆளத் திறமை உண்டாகின்றது. ஆனதால் தம்மக்கள் மாட்சிபெறவேண்டுமென்கிற கோரிக்கை ஒருபக்கத்திலிருந்தாலும், அதற்காகப் பெண்களுக்குப் பேராசையையுண்டாக்கி அவர்களை அநாதரணைசெய்யாமல், ஒரு நாடோடியான புருஷனை மருமகனாய் வாய்ப்பதாகப் பாவித்து அதற்கேற்றபடி பெண்களைப் பழக்கிவருவார்களானால், அப்பெண்கள் பிற்காலத்தில் வரவரச் செல்வமும் சீரும் சந்தோஷமுமாக வாழ்வார்கள் என்பதற்கு யாதொரு சந்தேகமும் இல்லை. நமக்கு உள்ளது இவ்வளவுதான் என்று திருப்தியடைந்திருப்பவர்களுக்கு எதிர்பாராத ஏற்றமொன்று உண்டாகுமானால் அதைவிட வேறு ஆனந்தமுண்டோ? எல்லாம் நமக்குக் கிடைக்கவேண்டும்; நாமே யாவர்க்கும் மேலாயிருக்கவேண்டுமென்று பேராசைகொண்டிருக்க, ஒன்றும் கிடைக்காமற்போவதைவிட வேறு துக்கமுண்டோ?

தக்காணத்துப் பூர்வகதைகள்.

பிராமணனும், புலியும், ஆறு நியாயாதிபதிகளும்

ஒரு தேசத்தில் பிராமணனொருவன் தேசாந்தர யாத்திரையாய்ப் போய்க்கொண்டிருந்தான். வழியிலே ஒரு இருப்புக்கூடு இருந்தது. அந்த ஊராரெல்லாரும் சேர்ந்து ஒரு பெரும்புலியைப் பிடித்து அந்தக் கூட்டுக்குள் அடைத்துவைத்திருந்தார்கள். அந்தப் பிராமணன் அவ்வழியே போகக்கண்டு, அந்தக் கூட்டில் அடைபட்டிருந்த வேங்கை அவனை அழைத்து: ஓ, என் சகோதரப்பிராமணரே! சகோதரப்பிராமணரே! உமக்கு என்னிடத்தில் தயவில்லையா? வெகுநாளாய்த் தண்ணீர்குடியாமல் தாகத்தால் தவிக்கிறேனே! ஒரு நிமிஷகாலம் இந்தக்கூட்டுக் கதவைத்திறந்து என்னை வெளியே விடுவீரானால் தண்ணீர் குடித்துவிட்டுவந்து மறுபடியும் உள்ளே புகுந்துகொள்ளுகிறேன்; இந்த வேளையில் அவ்வளவு உதவிசெய்வீரானால் நான் பிழைப்பேனென்று வேண்டிக்கொண்டது. அதற்கு அந்தப் பிராமணன்: நீ பேசுவது வெகு நன்றாயிருக்கிறது! கதவைத்திறந்து வெளியே விடுவதற்குமுன் நீ என்னைத் தின்றுபோடமாட்டாயா? என் உயிருக்கு அபாயமுண்டாகத்தக்க காரியம் நான் ஒருபோதும் செய்துகொள்ளமாட்டேன் என்றான்.

அதைக்கேட்டு அந்தப் புலி: ஓ, கருணைக்கடலே! சரணமென்று அடைந்தவரைக் கைவிடாதவரே! நான் அப்படி ஒருபோதும் செய்வதில்லை; நான் அவ்வளவு நன்றிகெட்டவனா? சத்தியமாய்ச் சொல்லுகிறேன்; ஒரு நொடியில் தண்ணீர் குடித்துவிட்டு வந்து உடனே உள்ளே புகுந்துகொள்ளுகிறேன்; அவ்வளவு உதவி செய்யவேண்டுமென்று நெடுநேரம் பிரார்த்தித்தது. மிகவும் வருந்தி வேண்டவே, பிராமணன் மனமிரங்கி அந்தக் கூட்டின் கதவைத் திறந்தான். தனக்குக் கொஞ்சம் வெளியேவர வழியகப்பட்டவுடனே, அந்த வேங்கை, ஒரே குதியாய்க் குதித்து அவன்மேல் பாய்ந்து, முதலில் உன்னைத் தின்றுவிட்டல்லவோ தண்ணீர் குடிக்கவேண்டும், வெறுவயிற்றில் தண்ணீர்குடிக்கலாமா? என்றது. அதற்கு அந்தப் பிராமணன் அஞ்சாமல் ஓ, புலிராஜனே! நீ அவசரப்படாதே; இதைப்பற்றி முதலில் ஆறுபேருடைய அபிப்பிராயத்தைக் கேட்போம்; யாவரும் நீ இப்போது செய்யத்துணிந்திருப்பது நியாயந்தானென்று சொல்வார்களானால், பிறகு நீ என்னைக் கொல்லயாதொரு தடையுமில்லை என்றான். புலியும் அதற்குச் சம்மதித்து: நல்லது அப்படியே ஆகட்டும்; ஆறுபேருடைய கருத்தைக் கேட்போம் வா என்றது.

புலியும் பிராமணனும் மத்தியஸ்தர்களைத் தேடிக்கொண்டுபோனார்கள். வழியில் பெரிய ஆலமரமொன்று இருந்தது. அதைப் பார்த்து பிராமணன்: ஓ, ஆலமரமே! ஆலமரமே! நீ எங்களுக்கு ஒரு நியாயஞ்சொல்லவேண்டுமென்றான். அதைக்கேட்டு அம்மரம்: எந்த விஷயத்தைப்பற்றி நியாயஞ்சொல்லவேண்டுமென்று கேட்க, அதற்குப் பிராமணன்: இந்தப் புலி வழியிலே போய்க் கொண்டிருந்த என்னை அழைத்து ஓ! தயாநிதியே! இந்தக் கூட்டின் கதவைச் சற்றே திறந்துவிடுங்கள்; கொஞ்சம் தண்ணீர் குடித்துவிட்டு வருகிறேன் என்று வேண்டிக்கொண்டது; எனக்கு யாதொரு தீங்கும் செய்வதில்லையென்று வாக்குக்கொடுத்ததினால், ஐயோ பாபம்! என்று கதவைத் திறந்தேன். வெளியே வந்தவுடன் என்னைக் கொல்லத் தீர்மானித்தது. அப்படிச் செய்வது நியாயமா அல்லவா? என்றான்.

அதைக்கேட்டு அந்த ஆலமரம்: அப்படியா! நன்றாய்க் கீழும் மேலும் கொளுத்துகிற கோடைகாலத்து வெயிலில் மனிதர்களெல்லாம் என் அடியில்வந்து தங்கியிருந்து இளைப்பாறினபிறகு, எனது அழகிய கிளைகளையெல்லாம் ஒடித்துத் தங்களுக்கு வேண்டுமளவு வெயில்படாமல் தங்களைக் காத்த இலைகளையெல்லாம் கிள்ளிக்கொண்டுபோகிறார்கள். மனிதர்கள் மிகவும் நன்றிகெட்டவர்கள்; ஆதலால் மனிதனைப் புலி சுகமாய்ப் பிடுங்கித் தின்னலாமென்று தீர்மானஞ்செய்தது.

அதைக் கேட்டவுடனே புலி பிராமணனைக் கொன்றுபோட்டிருக்கலாம். ஆயினும் அந்தப் பிராமணன் புலியைப்பார்த்து: ஓ, புலியரசே! நீ இப்போதே என்னை அவசரப்பட்டுக் கொல்லாதே, ஆ[illegible] பேருடைய அபிப்பிராயத்தைக் கேட்கும்படி வாக்குத்த[illegible] செய்திருக்கிறாயல்லவா? என்று சொல்லவே, புலி. "நல்ல[illegible] டியே ஆகட்டும்." என்று அங்கீகரித்தது. இருவரும் [illegible] கொஞ்சந்தூரம் போனார்கள். அங்கே ஒரு ஒ[illegible]த்தைக் கண்டு, பிராமணன்: ஓ, ஒட்டகநாயகமே! ஒட்ட[illegible]மே! ஒரு நியாயங்கூறவேண்டுமென்றான். ஒட்டகம்: "எ[illegible]விஷயமாய்" என்றுகேட்க, பிராமணன்: தான் வழியே போய்க்கொண்டிருக்கும் போது அந்தப் புலி தன்னை வேண்டினதும், தான் மாட்டேனென்று சொன்னதும், அதற்கு அது தான் யாதொரு தீங்கும் செய்வதில்லையென்று பிரதிஞ்ஞை செய்துகொடுத்ததும், தான் இரக்கமுற்றுக் கதவைத் திறந்தவுடன் அது தன்மேல் பாய்ந்து கொல்லவந்ததும் ஸவிஸ்தாரமாய்ச் சொல்லி, "அது என்னைக் கொல்வது நியாயமா? அல்லவா?" என்று கேட்டான். அதற்கு ஒட்டகஞ்சொன்ன தீர்மானமாவது: நான் நல்ல வயதும் வலிமையும் உள்ளவனாயும், நன்றாய் உழைக்கத்தக்கவனாயும் இருந்தபோது என் எஜமானன்

னைக்கு நல்ல நல்ல உணவுகளெல்லாம் கொடுத்துப் பரிவோடு பாதுகாத்துவந்தான். அவனண்டையே வேலைசெய்து என் வலி மையெல்லாம் ஒழிந்துக் கிழவனாய்ப்போனேன்; இப்போது அவன் என்னைச் சிறிதும் ஆதரியாமல் தாங்கமாட்டாத சுமையை ஏற்றி, இரையும் போடாமல் அலைக்கழிக்கிறான்; மனிதர்கள் நியாயத்துக் குக் கட்டுப்படாத கொடியவர்கள்; ஆதலால் மனிதனைப் புலி சுக மாய்ப் பிடுங்கித்தின்னலாம் என்று ஒட்டகம் தீர்மானஞ்செய்தது.

அப்போது புலி பிராமணனைக் கொன்றாலுங் கொன்றிருக்க லாம். ஆயினும், பிராமணன் புலியைப்பார்த்து: நில், அவசரப்ப டாதே; ஆறுபேருடைய தீர்மானத்தையும் கேட்கவேண்டுமல் லவா? என்று சொன்னதனால், புலி அப்படியே ஆகட்டுமென்று புறப்பட்டது.

கொஞ்சந்தூரம் போகையில் அங்கே வழியோரத்தில் ஒரு எருது படுத்திருப்பது கண்டு, பார்ப்பான்: ஓ, தோழனே! நீ ஒரு செய்தி விசாரித்துத் தீர்மானஞ் சொல்லவேண்டுமென்றான். ரிஷ பம்: “என்னசெய்தி?” என்று கேட்க, பார்ப்பான்: ஒரு கூட்டில் அடைபட்டிருந்த இந்தப் புலி வழியே போய்க்கொண்டிருந்த என்னைக் கூவி, சற்றே கதவைத்திறந்து தண்ணீர்குடிக்க விடும் படி கேட்டுக்கொண்டதுமன்றி, எனக்கு யாதொரு தீங்குஞ்செய்வ தில்லை என்று சபதமும் செய்துகொடுத்தது. அதனால் நான் தயை செய்து கதவைத்திறந்து வெளியே விட்டவுடனே என்னைக் கொல் லக் கருத்துக்கொண்டது. அப்படிச் செய்வது நியாயமா, அநியா யமா? என்றான். அதற்கு எருது சொன்னதாவது: எனக்கு நன் றாய் உழைக்க உடம்பில் சக்தியிருந்தபோது, என் எஜமானன் மிகவும் ஆதரவாய்க் காப்பாற்றினான். இப்போது நான் கிழவ னாகி உபயோகமற்றுப்போகவே, அவன் நான் முன்செய்த உதவி யையெல்லாம் மறந்து, எக்கேடாயினும் கெட்டுமென்று துரத்தி விட்டான். மனிதர்கள் நன்றியும் பூததயையுமில்லாதவர்கள். ஆதலால் மனிதனைப் புலி நன்றாய்ப் பிடுங்கித்தின்னலாமென்று ரிஷபம் தீர்மானஞ்செய்தது.

நியாயாதிகாரிகளாகக் கருதப்பட்ட ஆறு ஜந்துக்களில் மூன்று இவ்வாறு பிராமணனுக்கு விரோதமாயே தீர்ப்புசெய்தன. இன் னும் அவனுக்கு நிராசைபிறக்கவில்லை. மற்ற மூன்றையுங்கேட் கலாமென்று நிச்சயஞ்செய்துகொண்டுபோனான்.

போய்க்கொண்டிருக்கையில், ஆகாயத்தில் ஒரு கழுகு பறக் கக்கண்டு, அந்தணன்: ஓ, பக்ஷிராஜனே! பக்ஷிராஜனே! எனக்கு ஒரு தீர்மானஞ்சொல்லவேண்டுமென்று தன் வியவஹாரத்தைச் சொல்லிக்கேட்க, அந்தக் கழுகு: மனிதர்கள் எங்களைக் கண்டால் சும்மா இராமல் உடனே சுட்டுப்போடுகிறார்கள்; குன்றுகளிலும்

மரங்களிலும் ஏறிக் குட்டிகளைத் திருடுகிறார்கள். மனிதர்கள் உலகத்திற்கு உபத்திரவஞ்செய்கிறவர்கள். ஆதலால் மனிதனைப் புலி சுகமாய்ப் பிடுங்கித்தின்னலாமென்று தீர்மானஞ்செய்தது.

இவைகளையெல்லாம் கேட்கவே, புலி: "ஓ, பிராமணரே! எல்லாம் உமக்கு விரோதமாயே நியாயஞ்சொல்லுகின்றனவே; இன்னும் ஏன் தாமதம்" என்று குதித்துக் கர்ச்சனைசெய்தது. அதற்குப் பிராமணன்: இன்னும் சற்றுநேரம் பொறு; இருவருடைய கருத்து மிருந்திருக்கிறதல்லவா? அதையும் கேட்போமென்று சொல்லிப் புலியை அழைத்துக்கொண்டுபோனான். அங்கே ஒரு முதலையைக் கண்டு, அதாவது தன் பக்கமாய்ச் சொல்லுமோவென்று, தன் கதையை ஆதிதொடங்கிச்சொன்னான். அதைக் கேட்டு முதலை சொன்னதாவது: நாங்கள் தலையைத் தண்ணீர்க்குமேலே தூக்குவதற்குமுன்னேயே மனிதர்கள் எங்களைச் சித்திரவதைசெய்து கொல்லக் காத்திருக்கிறார்கள். இப்பூமியில் மனிதர்கள் இருக்குமளவும் எங்களுக்குச் சுகம் கிடையாது. ஆதலால் மனிதனைப் புலி சுகமாய்த் தின்னலாமென்று முதலையும் அவனுக்கு விரோதமாயே தீர்மானஞ்செய்தது.

அதைக் கேட்கவே, அந்தப் பார்ப்பான் தன் உயிர்போய்விட்டதென்றே நினைத்தான்; ஆயினும், சொஞ்சநேரம் பொறுத்திருந்து ஆறாவது நியாயாதிபதியின் அபிப்பிராயத்தையும் கேட்டறியும்படி புலியை வேண்டிக்கொண்டான். ஒரு குள்ளநரி ஆறாவது நியாயாதிபதியாயிற்று. அந்த வேதியன் தன் செய்தியையெல்லாம் சொல்லி, மாமா நரிராஜனே! மாமா நரிராஜனே! இதைப்பற்றி உமது அபிப்பிராயம் என்னவென்று கேட்க, நரி: உன்னிடத்திலேதான் தப்பிதமிருக்கிறதோ, அதினிடத்திலேதான் தப்பிதமிருக்கிறதோ, நான் எப்படி நிதானிக்கிறது; உங்களிருவருக்கும் விவாதம் உண்டாவதற்குமுன் நீங்கள் எவ்விதமாயிருந்தீர்களோ, அப்படியே பார்த்தால்தான் குற்றத்தைக் கண்டறியலாம்; முன் நீங்கள் இருந்த விதத்தை எனக்குக் காட்டுங்கள் என்றது. அதற்குச் சம்மதித்துப் பார்ப்பானும் புலியும் அந்த இடத்திற்குப்போகப் புறப்பட்டார்கள். நரியும் பின்தொடர்ந்து போயிற்று. அங்கேபோய்ச் சேர்ந்தபிறகு நரி பிராமணனைநோக்கி: "எதேர், நீர் நின்றவிடத்தைச் சரியாய்க்காட்டும்" என்றது. பார்ப்பான்: "இதோ இங்கேதான் நின்றேன்" என்று அந்தக் கூட்டண்டைபோய் நின்றான். மறுபடியும் நரி: "அந்த இடந்தானா? சிறிதும் பிசகில்லையா?" என்று கேட்க, அவன்: இதே இடந்தான் என்றான். "ஆனால் புலி எங்கேயிருந்தது?" என்று நரி கேட்க, புலி: "இந்தக் கூட்டுக்குள்" என்று சொல்லிற்று. அதைக்கேட்டு நரி: "அதெப்படி? கூட்டுக்குள் நீ எவ்விதமாய் நின்றாய்? எந்தமுகம் நீ பார்த்திருந்தாய்?" என்று வினவ, புலி: "அதைப்பற்றி என்ன?

இப்படித்தான் நின்றேன்" என்று கூட்டுக்குள் எழும்பிக் குதித்து, தான் முன்நின்றபடியே நின்றது. அதைப்பார்த்து நரி: "நல்லது, எல்லாச்செய்தியும் செம்மையாய்த் தெரியாமல் நிதானிக்கக்கூடவில்லை; இந்தக் கூட்டுக்கதவு அப்போது சாத்தியிருந்ததா, திறந்திருந்ததா என்று கேட்க, பார்ப்பான்: "சாத்திப் பூட்டியிருந்தது" என்றான். "ஆயின் அப்படியே சாத்திப் பூட்டு பார்ப்போம்" என்று நரி கட்டளையிட்டது.

அப்படியே அந்தப் பிராமணன் கதவைச் சாத்திப் பூட்டிய பிறகு, நரி புலியைப்பார்த்து: ஆ, நன்றியற்ற கேடுகெட்ட புலியே! "ஐயோ! நாவறண்டு தண்ணீரில்லாமல் தவிக்கிறதேயென்று கதவைத் திறந்துவிட்டால், அவனைத் தின்றுவிடுவதுதானோ அவனுக்கு நீ செய்கிற பிரதியுபகாரம்? நல்லகாரியஞ்செய்ய நிச்சயித்தாய்! உன் வாழ்நாளெல்லாம் நீ இங்கேயேதான் இருந்து கழிக்கவேண்டும்; இனி ஒருநாளும் ஒருவரும் உன்னை வெளியே விடமாட்டார்கள்; நான் வந்து நேரமாயிற்று; எனக்குப் போக விடைகொடுக்கவேண்டும் என்றுசொல்லி, பின்பு, பிராமணனைப்பார்த்து: ஓ என் தோழரே! அந்தணரே! நீர் போகவேண்டிய இடத்திற்கு இனி யதேச்சையாய்ப் போகலாம்; யாதொரு தடையுமில்லை. உமக்கு வழி அப்படி; எனக்கு வழி இப்படி என்று சொல்லிவிட்டு, நரி வந்தவழியைப் பார்த்துக்கொண்டு ஓடிப்போயிற்று. பிராமணன் வெகு சந்தோஷமாய் தான் போகவேண்டியவிடத்திற்குப் போகப் பயணப்பட்டான்.

ரத்தத்தின் உறுப்புகள்.

நாம் ஜீவித்திருப்பதற்கு ரத்தந்தான் மூலாதாரமாய் இருக்கின்றது. நமது தேஹத்தின் ஒவ்வொரு பகுதிகளிலும் புதிய பொருள்களைக்கொண்டு சேர்த்து அங்கங்கிருக்கிற பழைய அழுக்குகளை வெளியே தள்ளிச் சுத்திசெய்து நமது உயிரைத் தாங்குகின்றது. அதனால் ரத்தத்திற்கு ஜீவத்திரவம் என்று பெயர். தேஹத்தில் ரத்தவோட்டம் நின்றுபோனால் உடனே உயிரோட்டமும் நின்றுபோம்.

சரீரத்திலுள்ள எலும்பு, முருந்து, நரம்பு, தசைநார் இவைகளெல்லாம் தண்ணீர், வெண்கரு, பிரகாசிதம், ஜிலதின், நார் இவைகள் சேர்ந்து உண்டாகின்றனவென்று சென்ற சஞ்சிகைகளில் சொல்லியிருக்கிறோம் அல்லவா? இவைதவிர, அவைகளுக்கு இன்னும் அநேக உறுப்புகளுண்டு. கொழுப்பு, எண்ணெய்ப்பொருள்

இரும்பு, சர்க்கரை, பலவகைப்பட்ட உப்புகள் இவைகளும் தேஹ கட்டுக்கு ஏதுவாகின்றன. இப்பொருள்களில் ஒன்றும் தன் இயற்கைவடிவத்தோடு நமது தேஹத்தில் இராது. இதற்குத் திருஷ்டாந்தமாய் இரும்பு, சர்க்கரை, பிரகாசிதம் ஆகிய இப்பொருள்களை நமது தேஹத்தின் எந்தப் பகுதியிலும் நாம் காணக்கூடாது. ஏனெனில், அவை தேஹத்திலுள்ள வாயுவோடும், தமது உருவமும் தோற்றமும் மாறித்திரிந்த வேறு சில பொருள்களோடும் ஒன்றாய்க் கலந்துபோகின்றன. ஆயினும் ரசாயனசாஸ்திரிகள் அவைகளை வெவ்வேறாகக் கண்டறிந்து தத்துவவிபாகஞ்செய்து அவைகளைத் தனித்தனியே பிரித்தெடுக்கவும் மாட்டுவார்கள்.

ரத்தம் நமது கண்ணுக்குச் சிவந்த ஒருவகைத் திரவப்பொருளாகத் தோற்றினாலும், அதில் நமது தேஹத்தைப் போஷிப்பதற்கு வேண்டிய எல்லாப் பொருள்களும் கலந்திருக்கின்றன. மிகவும் சிறந்த தூரதிருஷ்டிக்கண்ணாடியைக்கொண்டு பார்ப்போமானால், ரத்தம் நிறமற்ற ஒருவகைப்பொருளாய் அது நிரம்ப சிறுசிறு அணுக்கள் மிதந்துகொண்டிருக்கக்காணலாம். அவ்வணுக்களுள் சில சிவப்புநிறமுள்ளவைகளாகவும், சில நிறமற்றவைகளாகவும் இருக்கின்றன. சிவந்த அணுக்களாலேதான் ரத்தத்துக்குச் சிவப்புநிறம் உண்டாயிருக்கின்றது. ரத்தத்திலிருக்கிற அந்த அணுக்கள் இவ்வளவு அவ்வளவென்று கணக்கிட்டுச்சொல்ல முடியாது. அவை ஒரு சதுர அங்குலம் அளவுள்ள இடத்தில் பத்துகோடிக்கு அதிகமாய்த் தங்கியிருக்கும்படி அவ்வளவு சிறியவைகளாயும், தம்மிலும் சிறிய நாடிகளின் வழியாய் நுழைந்து போம்படி அவ்வளவு நயமும் மெதுவும் ஸ்திதஸ்தாபககுணமும் உள்ளவைகளாயும் இருக்கும். சிவந்த அணுக்களைவிட ரூபமற்ற அணுக்கள் கொஞ்சம் பெரியவை. மேலும் அவை சிவந்த அணுக்களவ்வளவு அதிகமில்லை. ஜீவசரீரத்திலுள்ள ரத்தத்தில் அவைகளின் உருவம் அடிக்கடி மாறிக்கொண்டேயிருக்கும்.

மிருகம், பறவை, ஊர்வன, நிலம், நீர் ஆகிய இரண்டிலும் ஜீவிக்கத்தக்க ஜந்துக்கள், மீன்முதலிய முதுகெலும்புள்ள ஜலஜந்துக்கள் இவைகளுக்கெல்லாம் ரத்தம் நமக்கிருப்பதுபோலச் சிவப்புநிறமுள்ளதாகவே இருக்கும். ஏனெனில், அவைகளின் ரத்தத்தில் சிவந்த அணுக்களும் நிறமற்ற அணுக்களும் இருக்கின்றன. பூச்சி, புழு, நத்தை, சிப்பிமுதலான எலும்பற்ற ஜந்துக்களுக்கு ரத்தம் வெண்

மைநிறமுள்ளதாகவேயிருக்கும். ஏனெனில், அவைகளின் ரத்தத்தில் சிவந்த அணுவே கிடையாது; எல்லாம் நிறமற்ற அணுக்கள்தாம்.

இந்த அணுக்களாலேதான் ரத்தத்துக்கு உயிர்ப்பிக்கிற சக்தி உண்டாயிருக்கின்றதுபோலும். இந்த அணுக்கள் மிதந்துகொண்டிருப்பதற்கிடமான திரவப்பொருளானது, தண்ணீர், வெண்கரு, நார், தேகத்தைப் போஷிப்பதற்கு வேண்டிய இன்னும் வேறுபொருள்கள் இவைகளால் உண்டாயிருக்கின்றது. அதிலிருக்கின்ற அணுக்களோ பிரகாசிதம், இரும்பு, உப்பு, கொழுப்புமுதலியவை சேர்ந்துண்டாகின்றன. அவை அப்போதைக்கப்போது சுவாஸவாயுவோடு கலந்து அந்தக் காற்றை ஆகரிஷித்துக்கொள்ளத்தக்க சக்தியுடையவைகளாய் இருக்கின்றன. ரத்தத்தைச் சுத்திசெய்யவும் அதற்கு ஜீவசத்தியைக் கொடுக்கவும் சுவாஸவாயு அவசியமென்று முன் ஒரு சஞ்சிகையில் படித்திருப்பதை நாம் நினைத்துக்கொள்வோம். சுத்தமான ரத்தத்தில் சிவப்புநிறமிருப்பதினாலேயே அதில் சுவாஸவாயுவும் இரும்பும் சேர்ந்திருக்கிறதென்று நமக்குத் தெரிகின்றது. ஏனெனில், காற்றிலே போட்டுவைத்த இரும்பிலே சிவந்த துரு ஏறுவதுபோலவே ரத்தத்தில் சுவாஸவாயுவும் இரும்பும் கலந்தால் சிவப்புநிறம் உண்டாகின்றது.

தூரதிருஷ்டிக்கண்ணாடி இல்லாமலும் ரத்தத்தில் பலவகைப்பொருள்கள் கலந்திருக்க நாம் காணலாம். ரத்தத்தை ஒரு பாத்திரத்தில் ஊற்றிவைப்போமானால் கொஞ்சநேரத்துக்குப்பிறகு அடியில் சிவந்த ஒருவகைப் பொருளாகத்தங்கி மேலே மஞ்சள்நிறமுள்ள ஒருவகை நீராய்த் தெளிந்துபோம். அந்த நீருக்கு வபாநீர் என்று பெயர். அந்த நீர் வெண்கரு, சுண்ணம், பலவித உப்பு, இன்னும் இதரமான பொருள்கள், அளவற்ற தண்ணீர் இவைகள் சேர்ந்து உண்டாகின்றது. அடியில் தங்குகிற பொருளில் நாரும் அளவற்ற சிவந்த அணுக்களுமே நிறைந்திருக்கின்றன.

இவ்வாறு தண்ணீர், வெண்கரு, நார், ஒருவகைச்சுண்ணம், எண்ணெய்ப்பொருள், சர்க்கரைப்பொருள், கொழுப்பு, இரும்பு இன்னும் தேஹபோஷணத்திற்குவேண்டிய மற்றப்பொருள்கள், இவையெல்லாம்சேர்ந்துதான் ரத்தம் உண்டாகின்றது. வாயுமண்டலமாய் எங்கும் வியாபித்திருக்கிற சுவாஸவாயு, தர்க்கியஜவாயு,

அமிலவாயு ஆகிய இம்மூன்று வாயுவும் இந்தப் பொருள்களோடு கலந்திருக்கின்றன. அவைகளுக்கு வாயுமண்டலத்தில் ஒன்றுக் கொன்றிருக்கிற அளவுக்கும் ரத்தத்திலிருக்கிற அளவுக்கும் வேற்றுமையுண்டு. இப்படி இந்தப் பொருள்களெல்லாம், கடவுள் ஏற்படுத்தியபடி அவ்வவற்றின் அளவு கொஞ்சமும் குறையாமல், சரியாய்ச் சேர்ந்து உண்டாகிற ரத்தந்தான் மிகவும் ஆரோக்கியமானது.

தேஹநிறையில் பதின்மூன்றில் ஒருபங்கு ரத்தத்தின் அளவென்று கணக்கிடுகிறார்கள்; ஆதலால், 154 பவுண்டு நிறையுள்ள மனிதனுடம்பில் ரத்தமாத்திரம் 12 பவுண்டு நிறையுள்ளதாயிருக்கும்.

சிறுவர்க்கான கதை.

சிங்கமும் சுந்தரமும்.

முற்காலத்தில் மூன்று ஆண்குழந்தைகளும், மூன்று பெண் குழந்தைகளும் ஆக ஆறு பிள்ளைகளுடன் வர்த்தகன் ஒருவன் வெகு தனிகனாய் வாழ்ந்துகொண்டிருந்தான். அவன் மிகவும் விவேகியாகையால், வேண்டியபொருள் செலவழித்துத் தன் மக்களைப் படிப்பித்தான். பெண்கள் மூன்றுபேரும் மிகுந்த அழகும் சாமர்த்தியமும் உடையவர்களாயிருந்தார்கள். அம் மூன்றுபெண்களுள் கடைசிப்பெண் மிகவும் புத்திமதி விவேகங்களிற் சிறந்தவளென்று பெருமைபெற்றிருந்தாள். அவள் மிகவும் சவுந்தரியத்திற் சிறந்தவளாயிருந்ததனால் சிறுவயதில் அவளுக்குச் சுந்தரம் என்றே பேர் பிரசித்தமாயிற்று. வயது வந்தபிறகும் அவள் யாவரும் விரும்பத்தக்க தன்மையுடையவளாயிருந்ததனால் அப்போதும் அந்தப் பெயர் மாறாமலேயிருந்தது. அதனால் அவளிடத்தில் அவள் சகோதரிகள் பொறாமை கொண்டார்கள். இந்தக் கடைக்குட்டி மற்றவர்களைவிட வெகு அழகியாயிருந்தாளென்பதுமாத்திரமேயல்ல, வேண்டிய நற்குணங்களுமுடையவளாயிருந்தாள். மூத்தபெண்கள் இருவர்க்கும் உயர்ந்த அந்தஸ்தும் செல்வமும் இருந்தபோதிலும், அவர்கள் அதைச் சீராய் உபயோகப்படுத்தமாட்டாமற்போனார்கள். அடிக்கடி தம்மைத்தாம் பலவிதமாய்ச் சிங்காரித்துக்கொள்வதும், பலவிடங்களில் போய் விளையாடுவதுமாய், தம்முடைய தங்கை ஒருபோதும் காலத்தை வீண்போக்காமல் படிப்புமுதலிய பல உபயோகமான காரியங்களிலேயே செலவழித்துக்கொண்

டிருப்பதற்காக அவளைப் பரிகாசஞ்செய்துகொண்டிருந்தார்கள். இம்மூன்று பெண்களும் மிகுந்த அதிர்ஷ்டசாலிகளாயிருப்பார்களென்று எண்ணி, அநேகம் பாரிவர்த்தகர்கள் அப்பெண்களைக் கலியாணஞ்செய்துகொள்ள முயன்றார்கள். அதற்குப் பெரியபெண்கள் இருவரும், நாங்கள் ஒரு உயர்ந்த மகாராஜனையல்லவா கலியாணஞ் செய்துகொள்ளவேண்டும்; அதற்கு ஒருபடி தாழ்ந்தஅந்தஸ்து உள்ளவனாயிருந்தாலும் ஒருவாறு ஏற்றுக்கொள்ளலாம்; அப்படியில்லாமல் இந்த அற்பர்களையா கலியாணஞ்செய்துகொள்ளுகிறது! என்று சொல்லிக்கொண்டிருந்தார்கள். அழகிற்சிறந்த பவழக்கொடியாகிய கடைக்குட்டியோ அதிகமாய் ஒன்றுஞ்சொல்வதில்லை. இன்னும் எனக்குக் கலியாணஞ்செய்துகொள்ளத்தக்க வயது வரவில்லை. வயது வருகிறவரையில் தந்தை வீட்டிலேதான் வஸிக்கவேண்டுமென்றுமாத்திரஞ் சொல்லிக்கொண்டிருந்தாள்.

இப்படியிருக்கையில், ஏதோ ஒருதுரதிர்ஷ்டத்தால் அந்த வர்த்தகனுக்குச் செல்வமெல்லாம் போய்விட்டது. அதனால் அவன் கண்ணும் கண்ணீருமாய்த் தன் மக்களண்டைவந்து, குழந்தைகாள்! இனி நாம் இப்பட்டணத்தில் பிழைக்க வழியொன்றுமில்லை. நாட்டுப்புறத்திலேதான் போய் உழைத்துச் சம்பாதித்து ஜீவனம் பண்ணவேண்டும் என்றான். அதைக்கேட்டுப் பெரிய பெண்கள் இருவரும் தமக்கு இஷ்டர்கள் அநேகர் பட்டணத்தில் இருப்பதுபற்றி அவ்விடத்தை விட்டுப்போக மனமில்லாமல், நாங்கள் நாட்டுப்புறத்திற்கு வந்து என்னசெய்கிறது? எங்களுக்கு ஒரு வேலையும் செய்யத்தெரியாதே என்றார்கள். உண்மையாய் அவர்களுக்கு ஒரு வேலையுஞ்செய்யத்தெரியாதுதான். கடைசிப்பெண்ணை சுந்தரமோ வாயைத் திறக்கவேயில்லை. ஆயினும் திடீரென்று தனக்கு நேர்ந்த சங்கடத்திற்காகச் சிலநாள்வரையில் துக்கப்பட்டுக்கொண்டிருந்து, பிறகு அழுவதனால் நன்மை ஏதாவதுண்டாகுமோ? தைரியமாயிருந்துதான் எதையும் சாதிக்கவேண்டுமென்று மனவுறுதிசெய்துகொண்டு, சம்பத்தில்லாமற்போனலும் சவுக்கியமாகவே இருக்கவேண்டுமென்று அதற்குத் தக்கபடி முயற்சிசெய்துகொண்டுவந்தாள். 'முயற்சியுடையார் இகழ்ச்சியடையார்' என்பது அவள் உள்ளூறக்கொண்ட கொள்கை. பெரிய பெண்கள் இருவரையும் கலியாணஞ்செய்துகொள்ள விரும்பினவர்களெல்லாம், இப்போது அவர்களுக்கு நேர்ந்த வருத்தத்தைக் கேட்டுச் சந்தோஷமடைந்து, நாம் இப்பெண்களைக் கலியாணஞ்செய்துகொள்ளாமல் தப்பினது நமது நல்லகாலந்தான்; அவர்களுக்கு இருந்த சம்பத்துக்காகவே நாம் அவர்களைக் கலியாணஞ்செய்துகொள்ளலாமென்று நினைத்தது; ஏனெனில் அவர்கள் கெர்வமும் கெட்ட நடத்தையுமுடையவர்கள் என்றார்கள்.

சுந்தரத்துக்கும் அதேமாதிரியான கஷ்டகாலம் நேர்ந்திருந்தாலும், அதைக் கேட்டவர்களெல்லாம் அவளுக்காக மிகவும் பரிதாபப்பட்டு, அவளுடைய நற்குணங்களுக்காகவே அவளை அநேகர் கலியாணஞ்செய்துகொள்ளக் கோரினார்கள்.

பிறகு அந்த வர்த்தகன் தன் சமுசாரத்துடன் ஒரு சிறு கிராமத்திற்சென்று, தானும் தன் பிள்ளைகளுமாய் உழுது பயிர்செய்யப் பிரயத்தினப்பட்டான். சுந்தரமும் நினைந்தப்பாமல் அதிக காலையிலே எழுந்து, வீடுமுதலியவைகளைச் சுத்திசெய்து, வேலைசெய்கிறவர்கள் வெளியே போவதற்குமுன் அவர்களுக்குச் சமையலும் சித்தஞ்செய்துகொண்டிருந்தாள். அவளுக்கு முதலில் இந்த வேலைகள் கொஞ்சம் கடினமாய்த் தோன்றினாலும் பழகப் பழகச் சுலபமாய்ப்போயின. ஒரு நிமிஷங்கூடச் சும்மாவிராமல் அவள், ஒழிந்தவேளைகளில் படிப்பு, தையல்முதலிய வேலைகளைப் பார்த்துவந்தாள். இப்படி வேலைசெய்வதனால் அவளுக்கு தேகசவுக்கியம் அதிகமாயிற்றேயன்றி ஒரு குறைவுமுண்டாகவில்லை. பெரிய பெண்கள் விடிந்து பத்துநாழிகைவரையில் படுத்த படுக்கையைவிட்டு எழுந்திராமல் அங்கேயே காலைப்போசனம் புசிப்பதும், ஏதாவது கொஞ்சம் வருத்தந்தோன்றுங் காலத்தில் தங்களுடைய செல்வம் போய்விட்டதற்காக வருத்தப்படுவதும், தம்முடைய தங்கை இந்த அற்ப ஜீவனத்தாலும் திருப்தியடைந்திருப்பதற்காக அவளை இகழ்ந்துபேசுவதுமாயிருந்தார்கள். அவர்களுடைய தகப்பனோ, தன் கடைசிப்பெண் தன்னைப்போலவே உழைத்து வருந்துவதைக் கண்டு, அவளிடத்தில் மிகவும் பக்ஷமாய் நடந்துவந்தான். (இன்னும் வரும்.)

வைசூரி சாத்தியமான வியாதியா?

வைத்தியசிரேஷ்டராகிய

டாக்டர் ஜியார்ஜ் ஸ்மித்து துரையவர்கள்

சென்னை விநோதக்காட்சிசாலையில்

வைசூரியைக்குறித்துச் செய்த

உபந்யாஸம்.

வைசூரியின் பரிவர்த்தனகாலம்.

பல தொடர்வியாதிகளுக்கு உள்ளதுபோலவே வைசூரிக்கும் விருத்திகாலம் க்ஷயகாலமென்று இரண்டு உண்டு. ஒருதடவை கொடுமையாய் வைசூரி வியாதி கண்டபிறகு மற்றொருதடவை காண்பதற்கு இடையில் 2, 3 அல்லது 4 வருஷகாலஞ் செல்லுகின்றது. இந்தக் கால அளவு

பம்பாயில் 2 வருஷமும், இங்கிலாந்தில் 3½ வருஷமும், சென்னையில் 4 வருஷமுமாகவிருக்கின்றது. முதல்தடவையில் அநேகமாய் வைசூரி வியாதிக்கு இரையான இளங்குழந்தைகளெல்லாம் அழிந்துபோவதனால், மறுபடியும் முன்அவ்வளவு குழந்தைகள் விருத்தியாக அதிக காலஞ் செல்லுகின்றது. அதனாலேதான் ஒருதடவை மிகவும் உக்கிரமாக வியாதி கண்டபிறகு மறுபடியும் காண்பதற்கு வெகுகாலம் தாமதிக்கின்றது.

டாக்டர் கார்னிஷ் துரையவர்களின் ரிப்போர்ட்டினால் இன்னும் விசேஷமான சங்கதிகள் வெளியாகின்றன. அதில் முக்கியமானதைச் சுருக்கித் தெரிவிக்கிறேன். 1855–ஹு முதல் ஒரு வருஷமாவது வைசூரி இப்பட்டணத்தை விட்டு முழுதும் நீங்கியதென்பதில்லை. இந்த வியாதி இங்கே குடிகொண்டிருக்கின்றது. இது விசேஷமாய்த் தோன்றாமலி ருந்தகாலம் சற்றேறக்குறைய 1870–வது வருஷமாகச் சொல்லலாம். அந்த வருஷத்தில் சுமார் 18 மரணந்தான் இந்த வியாதியால் நேரிட்ட தாம். 1855–ஹு முதல், 1868–ஹு வரைக்கும் மூன்றுதரம் இந்த வியாதி மும் மரமாய் வந்ததாக ரிஜஸ்தர் செய்யப்பட்டிருக்கின்றது. ஒவ்வொரு தடவை யும் நான்குவருஷத்திற்கு ஒருதரம் கண்டு இரண்டுவருஷகாலம் நீடித் திருந்தது. 1868–ஹு முதல், 1876–ஹு வரைக்கும் மூன்றுவருஷத்திற்குப் பின்னிட்டு ஒரு தடவை கண்டு மூன்றுவருஷகாலம் நீடித்திருந்தது. இந்தக் கால அளவுகளைப் பார்க்கும்போது, இப்போது சென்ற 1876–ஹு கடைசியில் கண்டிருக்கிற வைசூரிக்கு இதுவே முதல்வருஷமாகை யால், இது வெகுவாய் இன்னும் ஒன்றரைவருஷகாலம் நிலைபெற்றிருக் கும்போலே காண்கிறது. சென்ற டிசம்பர்மாசத்தில் தொடங்கின இந்த வியாதியால் ஏப்பிரல்மீ 4உக்குள் 2861 பேர் மரணமடைந்ததாகக் கணக் கிட்டிருக்கின்றது. இந்த வியாதி கண்டவர்களுள் 100க்கு 12 வீதம் இறந்ததாகச் சொல்லலாம். இனி என்னநடக்குமோ? அதைக் கண்ட றிந்து சொல்ல நான் தீர்க்கதரிசியன்று. ஆயினும் சென்ற 22 வருஷத் திய அறிக்கைகளை ஆராய்ந்து பார்க்கும்போது, இந்தக் கொள்ளைநோய் 1878–ஹு கடைசியில் கொஞ்சம் சாந்தப்படுமென்றும், மறுபடி இரை யாகக் குழந்தைகள் விருத்தியாவதற்காக மூன்றுவருஷகாலம் காத்திருந்து, 1881–ஹு கடைசியில் வேறொரு ஹைதர்அலி படையெடுத்துவருவது போல் வீடுகள்தோறும் வந்து கர்ச்சனைசெய்து எல்லாவற்றையும் வாரிக் கொண்டுபோமென்றும் நிதானிக்கத்தக்கதாயிருக்கிறது.

வைசூரி உபத்திரவம்.

நாடுநகரங்களில் நோய்க்கிடமான குப்பைகள் எங்கும் சேரவொட் டாமல் செம்மையாய்க் கண்காணிப்பதற்கு ஸ்தலசுத்தி விசாரணைக்காரர் களும், சுகாதாரமான பலவிஷயங்களைப் போதிப்பதற்குச் சிறந்த உபாத்தி யாயர்களும், குப்பைகளெங்கும் சேரவொட்டாமல் வாரிக்கொண்டுபோ

வதற்குக் குப்பைக்காரர்களும் இக்காலத்தில் அதிகரித்திருப்பதுமல்லா மல், ஐரோப்பியர்களெல்லாம், தமக்கு வைசூரியால் யாதொரு தீமையும் நேரவொட்டாமல், செம்மையாய் அம்மைகுத்திக்கொண்டிருக்கிறார்கள். ஆதலால் இக்காலத்திலிருக்கிற ஐரோப்பியர்களுக்கு முன்னோர்காலத்தி லிருந்த அம்மையின் கொடுமை என்னதெரியும்? அக்காலத்தில் ஒரு அரசன் மரணம், வைசூரி என்கிற இரண்டு சொற்களையும் தன் காத ண்டை சொல்லவே கூடாதென்று கட்டளையிட்டு இருந்தானாம். அம் மைகுத்துவது ஏற்படுவதற்குமுன்பு ஐரோப்பாகண்டத்தில் அம்மையினால் மரணம் வருஷத்தில் ஐந்துலக்ஷமும், லண்டன் பட்டணத்தில் வருஷ வாரி மரணத்தில் 14ல் ஒருபங்கு வைசூரியாலுண்டான மரணமுமாக இருந்தது. சென்ற நூற்றாண்டில் பத்திலொருபங்கு வைசூரியால் மர ணமடைவதும், மற்றொருபங்கு அரூபமடைவதுமாக இருந்தனவென்று ஒரு வைத்தியசாஸ்திரி கணக்கிட்டுச் சொல்லியிருக்கிறார்.

வைசூரி முத்தினின்றும் பாலெடுத்துக்குத்தல்.

இந்தக் கொடியவியாதியைத் தன் விஷத்தைக்கொண்டே கொல்ல வேண்டுமென்கிற அபிப்பிராயம் முதலில் யாருடைய மனதில் தைத்ததோ? அதைப்பற்றி யாதொரு சரித்திரத்தையும் காணோம்; அவன் பேரும் தெரி யவில்லை. ஆயினும் அவன் ஒரு கீழ்த்திசையானாகவே இருக்கவேண்டுமெ ன்றுமாத்திரம் நம்பத்தக்கதாயிருக்கின்றது. இந்த விஷயம் ஒருவனுடைய மனதிலேயே தோன்றியிருந்தாலும் இருக்கலாம்; அல்லது பலபேர்களு டைய கருத்தில் ஏககாலத்திலாவது பல வேளைகளிலாவது தோன்றியி ருந்தாலும் இருக்கலாம். ஆயினும் சிறந்த விஷயங்களெல்லாம் ஒருவ னுடைய மனதிலேயே தோற்றுகின்றனவேயன்றிப் பலபேர்களுடைய மனதில் தோற்றுவதில்லை. நியூடன் என்பவர் பூமியின் ஆகர்ஷணசக்தி யைக் கண்டுபிடிப்பதற்குமுன் எத்தனையோ பழங்கள் மரத்தினின்றும் கீழே வீழ்ந்துகொண்டிருந்தன. வாட்சு என்பவர் நீராவியந்திரத்தைக் கண்டுபிடிப்பதற்குமுன் எத்தனையோ சமயற்பாத்திரங்கள் நீராவியை உண்டாக்கிக்கொண்டிருந்தன. ஆயினும் அந்தச் சிறந்த தத்துவங்கள் அதற்குமுன் யார்மனதிலாவது தோன்றினவோ? அதுபோலவே வைசூ ரியின் விஷத்தைச் சுவாசத்தின்வழியாய் உட்கொள்வதனால் எவ்வளவு அபாயமான நோயுண்டாகுமோ, அதைவிட அம்மைவிஷத்தைத் தசைக் குள் கீண்டிவைப்பதனால் உண்டாகிற நோய் மிகவும் சாந்தமாயும் லகுவாயுமிருக்குமென்றும், அதன்பிறகு வைசூரிவியாதி பலமாய்க் காண மாட்டாதென்றும் இந்தச் சிறந்த விஷயத்தைக் கண்டுபிடித்தது மனிதர் களுக்கு எவ்வளவு மேம்பாட்டைக் கொடுக்கத்தக்கதாயிருக்கின்றது! வைசூரிப் பாலெடுத்துக்குத்துவது சீனதேசத்தார்க்கு 6-வது நூற்றாண் டிலேயே தெரியுமாம். ஹிந்துதேசம், பாரசீகம், ஆபிரிகா, ஸர்கேஷியா,

அர்மீனியா, ஜார்ஜியா முதலிய தேசங்களில் வெகுநாளாய்த் தெரிந்து வழங்கிவருகின்றது. இங்கிலாந்திலோ 1722-ஹுவரையில் இந்தச்செய்தி தெரியாமலே இருந்தது. அந்த வருஷத்திலேதான் கான்ஸ்டான்டிநோபில் என்னும் பட்டணத்திலிருந்து லேடி மேரி வார்டிலி மாண்டேகு என்னும் துரைசானியால் இங்கிலாந்துக்குத் தெரிவிக்கப்பட்டது. இதை யாவரும் செய்துகொள்ளவேண்டுமென்று நிர்ப்பந்தஞ்செய்யாமையால், அதனால் விசேஷநன்மைகள் தற்காலத்தில் விளையாமற்போனபோதிலும் மரணசங்கியைமாத்திரம் குறைவுபட்டதென்பது இதனடியிற் குறிக்கிற செய்தியால் செம்மையாய்ப் புலப்படும். ஆயினும் அம்மை முத்தினின்றும் பாலெடுத்துக் குத்துவது கூடாதென்று 1841-ஹுத்தில் ஒரு சட்டம் ஏற்பட்டது.

வைசூரிப்பாலெடுத்து அம்மைகுத்துவது ஏற்படுவதற்குமுன் இங்கிலாந்தில் நேர்ந்த மரணங்களுள் பத்துலக்ஷத்தில் 3,141 அம்மையினால் நேர்ந்ததாகவும், அம்மைகுத்துவது தொடங்கிய பத்துவருஷங்களில் பத்துலக்ஷத்தில் 2,828 ஆகக் குறைவுபட்டதாகவும் கணக்கிட்டிருக்கின்றது. அப்படியாயின், இம்மாதிரி அம்மைகுத்துவதைச் சட்டமூலமாய் மறுத்தது ஏனென்கிறீர்களோ? அதற்குப் பலமான நியாயமொன்று உண்டு. வைசூரிகண்டவன் சரீரத்திலுள்ள முத்தினின்றும் பாலெடுத்துக் குத்தினால், அப்படிக் குத்திக்கொள்கிறவனுக்குமாத்திரம் லகுவாயும் சாந்தமாயும் வியாதிகாண்கிறதேயன்றி, மற்றவர்களுக்கெல்லாம் அது தன் இயல்பின்படியே அதிக உக்கிரமாய்க் கண்டு வெகுதீங்கு உண்டாக்குகின்றது. இப்போது அதற்குப்பதிலாய் ஏற்படுத்தியிருக்கிறபடி வைசூரியால் மாட்டினின்றும் பாலெடுத்துக் குத்துவதோ அப்படியல்ல; யாவர்க்கும் சாந்தமாகவே வியாதிகண்டு குத்திக்கொண்டவனுக்கும் லகுவாய்ப்போகின்றது.

வைசூரிப்பாலெடுத்துக் குத்துவது முன்இருந்ததவ்வளவு அதிகமாய் இப்போது இத்தேசத்தில் வழங்கிவராமற்போனபோதிலும், இத்தேசமெங்கும் நன்றாய்த்தெரியும். மாட்டினின்றும் அம்மைப்பால் கிடைக்காத பக்ஷத்தில், சில முன்ஜாக்கிரதையோடும் ஏற்பாடுகளோடும் உபயோகித்தால் வைசூரிப்பாலெடுத்துக் குத்துவதே வெகு நன்மையைத்தரும். மாட்டினின்றும் அம்மைப்பால் விசேஷமாய்க் கிடைக்கும்பக்ஷத்தில், முன்சொன்னமுறை யாவர்க்கும் கொடுமையாய் வியாதியுண்டாக்குமாகையால் ஆக்ஷேபிக்கத்தக்கதாயிருக்கின்றது. மாட்டினின்றும் அம்மைப்பால் கிடைக்குமானால் மனிதனுடம்பிலிருந்து வைசூரிப்பாலெடுத்துக் குத்துவது அவசியம் நீக்கத்தக்கதே.

மாட்டினின்றும் பாலெடுத்துக் குத்தும் முறை.

கிளோசெஸ்டர் மாகாணத்திலிருந்த இடையர்கள், பசுக்களின் முலைகளிலுண்டாகிற பிளவு, அப்பசுவின் பாலைக்கறக்கிறவர்களின் கையில் தொடர்கிறதென்றும், இத்தன்மையாய்க் கோமாரிகண்டவர்கள் வைசூரி

யினின்றும் தப்புவார்களென்றும், ஓர்வித நம்பிக்கைகொண்டிருந்ததாக, பிரிஸ்டல் பட்டணத்தையடுத்த ஸாட்பரியிலிருந்த வைத்தியனண்டை வேலைகற்றுவந்த சிஷனொருவன் கேள்விப்பட்டான். சிறந்த தத்துவங்களின் விதைகள் எவ்விடத்திலும் வெகுவாய் நம்மைச் சூழ்ந்துகொண்டிருக்கின்றன. ஆயினும் அவை நல்ல க்ஷேத்திரத்தில் விழுந்தாலன்றி முளைத்துப் பலிக்கமாட்டா. எட்வர்டு ஜன்னர் என்பவர் இந்தக் கருத்தைப் பிடித்துக்கொண்டு அதன்மேல் நெடுநாள் நிதானித்து தீர்க்கமாய் ஆலோசித்துப் பரிசீலனஞ்செய்தார். அப்படி பரிசீலனஞ்செய்துகொண்டிருக்கையில், தேஹதத்துவமுணர்ந்தவரும் வைத்திய சிரேஷ்டருமாயிருந்த ஜான் ஹண்டர் என்பவர் அவரை ஏளனஞ்செய்துகொண்டேயிருந்தார். ஆயினும் ஜன்னர், சேற்றிலே நட்ட கம்பம்போல் ஸ்திரமின்றி நேரத்துக்கு ஒரு நினைவும் சமயத்துக்கு ஒரு செயலுமாயிராமல், தான் கொண்டதே கொள்கையாக உறுதியாய்ப் பிடித்துக்கொண்டு இருபத்தைந்து வருஷகாலம் ஒரேமனதாய்ப் பரிசீலனஞ்செய்து, பின்பு 1798-ம் வருஷத்தில் தான் வருந்தித் தேர்ந்தவிஷயத்தை எழுபது பக்கங்களடங்கிய ஒரு சஞ்சிகையாகப் பதிப்பித்து வெளியிட்டார். அப்படி அவர் வருந்திக் கண்டுபிடித்த மேலான விஷயத்தின் மூலத்தை இந்தச் சிறு சஞ்சிகையில் அடக்கியிருக்கிறோம்.

கோவின்மாரி மனிதர்களை வைசூரி வரவொட்டாமல் காக்கின்றது. கோவின் மாரியினின்றும் எடுக்கப்பட்ட வைசூரிப்பாலும், அம்மை முத்துநின்றும் எடுக்கப்பட்ட பாலும் ஒன்றே; ஆயினும் அவைகளால் வரும் வேறுபாடு மனிததேகத்திற்கும் மாட்டுதேகத்திற்கும் உள்ள தத்துவபேதத்தினாலேயேதவிர வேறில்லையென்று ஜன்னர் ரூபித்திருக்கிறார். அம்மைப்பாலை எடுத்துப் பசுவுக்குக் குத்தினால் அதனாலுண்டாகிற முத்துக்களிலுள்ள நீர் அம்மைப்பாலாயிராமல்; அம்மைகுத்துவதற்குரிய வேறுவகைப்பாலாயிருப்பதனால், பசுவின் மாரிப்பாலிலுள்ள விஷமும் அம்மைப்பாலிலுள்ள விஷமும் ஒன்றேயாயினும், மிருகசரீரத்திற்கும் மனிதசரீரத்திற்குமுள்ள பேதத்தினால் வித்தியாசப்படுகின்றன என்பதைக் கண்டுகொள்ளலாம். இவ்வாறு ஜன்னர் கண்டுபிடித்த மேலானவிஷயம் முதலில் வெகுநாள் யாவரும் ஏளனம்பண்ணத்தக்கதாயிருந்தது. அதை யாவரும் ஏற்றமாய் அங்கீகரித்து வைத்தியசாஸ்திரத்தில் சிறந்தவிஷயமென்று ஒப்புக்கொள்வதற்கு 40 வருஷங்களுக்கு மேலாயிற்று. அதன்பிறகு ஐரோப்பியர்கள், மிகவும் நியாயத்திற்கு ஒத்துநடக்கின்றவர்களாதலால், மாட்டினின்றும் வைசூரிப்பாலெடுத்துக் குத்துவது அவசியமென்று சட்டத்தினால் வற்புறுத்தினார்கள்.

மரணவீதம்.

இங்கிலாந்தில் அம்மைப்பாலெடுத்துக் குத்துவது ஏற்படுவதற்குமுன் வைசூரியால் மரணம் 10 லக்ஷத்திற்கு 3,141 ஆக இருந்ததென்றும், அதன்பிறகு 10 லக்ஷத்திற்கு 2,828 ஆகக் குறைந்ததென்றும் மேலே குறித்திருக்கி

ரேமல்லவா? கோமாரிப்பாலெடுத்து அம்மைகுத்துவது ஏற்பட்டபிறகு நேரிட்ட மரணவீதத்தையும் கொஞ்சம் கண்டறிவோம்.

1849-வருஷவரையில் 10வருஷத்தில் மரணவீதம் 10 லக்ஷத்திற்கு 445ஆகவிருந்தது.
1859 ,, ,, ,, ,, 271 ,,
1869 ,, ,, ,, ,, 278 ,,

இந்தத் தொகைகளே நமக்குப் போதுமான திருஷ்டாந்தமாம். 1841-வருஷத்தில் அம்மைப்பாலெடுத்துக் குத்துவது கூடாதென்றும், 1853-வருஷத்தில் கோமாரிப்பாலெடுத்து அம்மைகுத்துவது அவசிய மென்றும் சட்டங்கள் ஏற்பட்டன. தகுந்த மேல்விசாரணையில்லாமையால், இந்தச் சட்டத்தின்படி செம்மையாய் நடப்பித்து அதிகமாய் ஜயம்பெறக் கூடவில்லை.

அம்மைகுத்துவது வைசூரியினின்றும் ஜனங்களை லக்ஷம்லக்ஷமாய்க்காக் கின்றதென்பதுமாத்திரமேயல்ல; இந்த வியாதியோடுகூடவே துணையாய் வருகின்ற செவிடு குருடு மொண்டி மூடம் முதலியவை உண்டாகாமல் ஜனங்களுடைய சவுக்கியத்தையும் விருத்திசெய்கின்றது. நம்முடைய அநு பவமே இதற்குப் போதுமான திருஷ்டாந்தமாம். 5, 6 வருஷங்களுக்கு முன் அம்மைகுத்துவது ஏற்படாமையால் பாஞ்சாலதேசத்தில் வெகுவாய்ச் சேதமுண்டாகிக்கொண்டிருந்தது. 180 லக்ஷம் குடிகளடங்கிய அத்தேசத் தில் வருஷவாரி அம்மையால் 20,000 மரணத்திற்குக் குறைவுபடவில்லை யாம். 1869-வருஷத்தில் 59,195 மரணம் நேரிட்டதாம். அந்த வியாதி யால் அங்கஹீனப்பட்டவர்கள் கணக்கில்லையாம். அப்பட்டணத்தின் வீதி வழியாய்ப் போகிறவர்கள் ஒன்று அல்லது இரண்டு கண்ணுமே கெட்டுப் போன குருடர்கள் எங்கேபார்த்தாலும் நிறைந்துகிடக்கக்கண்டு ஆச்சரியப் படுவார்கள். 100 பேரில் 99 பேருக்கு இத்தன்மையான கெடுதி சம்பவித் தது. இச்சென்னையில் கண்வைத்தியசாலை விசாரணைத்தலைவனாயிருந்ததில் கூடியவரையில் என்னனுபவத்தில் ஏழைகளுள் அநேகருக்கு அம்மையினு லேயே கண்போய்விடுகிறதென்று தெரியவருகின்றது.

அம்மைகுத்துவதை பலாத்காரஞ்செய்வது அவசியமென்பது.

அம்மைகுத்துவதனால் விளைகிற நன்மைகளுக்கு இப்படி அநேகம் திருஷ்டாந்தம் இருக்கையில், இந்தச் சுலபமான தேஹசம்ரக்ஷணையை நாகரி கம் மிகுந்த ஐரோப்பாவிலுள்ள யாவரும் தாமே வேண்டிச் செய்துகொ ள்ளவேண்டுவதைவிட்டு, அங்கே இதைப் பலாத்காரஞ் செய்ததேனென்று சிலர் ஆக்ஷேபிக்கலாம். அப்படி ஆக்ஷேபிக்கிறவர்களெல்லாம் சரித்திரங் களைச் செம்மையாய்ப் பயன்படக் கற்காதவர்களே. ஏனெனில் அவர்கள் செம்மையாய்க் கற்று அவிவேகம், உணர்ச்சியின்மை, கக்ஷிபேதம் இவைக ளுக்குள்ள எதிர்க்கிற சக்தியை அறிந்திருப்பார்களாகில், இவ்வாறு ஆக்ஷே பிப்பார்களா? இப்படிப்பட்ட பிரதிபந்தகங்களை அடக்கி வழிக்குக் கொ

ண்டுவருவதற்கு காலம், கல்வி, அனுபவம், திருஷ்டாந்தங்கள் இவைமாத்திரமேயன்றி துரைத்தனத்தார்மூலமாய் அதிக பலாத்காரமும் அவசியமாய் வேண்டியிருக்கின்றன. நாம் எவ்வளவு முயன்றபோதிலும் இந்தப் பிரதிபந்தகங்களை விலக்க நம்மால் முடியாது. எங்கிலாந்தில் ஜனங்களின் சௌக்கியத்திற்காக ஏற்படுத்திய அம்மைகுத்துவதின் பலாத்காரத்தை ஒரு நிமிஷகாலம் தளர்த்திவிடுவார்களானால் உடனே வைசூரியின் கொடுமைகள் எங்கும் காணத்தலைப்படும்.

1796—ஹு மேமீ 14௳ ஜன்னர் என்பவர் முதல்முதல் தான் அம்மைகுத்தினார். அம்மைகுத்துகிறவழக்கம் பொம்பாயில் 1802—ஹுத்திலும் சென்னையில் 1804-ஹுத்திலும் துவக்கமாயிற்று. இந்தநூற்றாண்டு ஆரம்பித்தபிறகு அம்மைகுத்துவதைப் பலாத்காரஞ்செய்ததனால், ஐரோப்பாகண்டம் வெகுவாய்க் காப்பாற்றப்பட்டிருக்கிறது. பொம்பாயில் பலாத்காரமாய் அம்மைகுத்துவதைக்குறித்துச் சட்டமேற்படாவிட்டாலும் சிலநாளைக்குமுன் அதற்காக மசோதாவொன்று சித்தமாயிருக்கின்றது. இந்தச் சென்னையின் க்ஷேமத்தை விரும்புகிற ஒவ்வொருவருடைய கோரிக்கையும், இந்த நல்லமாதிரி தாமதமின்றி இப்பட்டணமுழுதும் வழங்கவேண்டுமென்பதுதான். இந்த வியாதியால் நேரிடுகிற நஷ்டம் இப்படிப்பட்டதென்று இப்போது யாவர்க்கும் தெளிவாய்த் தெரிந்திருப்பதனால் அந்தக் கோரிக்கையைக் காரியத்திற்குக் கொண்டுவரவேண்டிய காலம் இதுதான். சென்ற ஜனுவரிமீ முதல் இதுவரையிலும் இருந்ததுபோல் மரணஜாபிதா 22 வருஷத்திய அனுபவத்தில் ஒருநாளும் இருந்ததில்லை. மூன்றுமாதம் நான்குநாளில் 2794 ஜீவன்களை இழந்தோம். இவ்வளவுமாத்திரமேயல்ல; ஏப்ரல்மீ முடிவதற்குள் இன்னும் ஓராயிரம் உயிர்களை இழப்போம்; மேமீ முடிவதற்குள் மறுபடி அவ்வளவு உயிர் சேதமாகும். ஐந்துமாதகாலத்தில் சுமார் நாலாயிரத்திற்கு அதிகமாய் அம்மையினால் மரணமுண்டாவதென்றால், அம்மைகுத்திக்கொள்வதை அவரவர்களிஷ்டப்படி விட்டுவிடுவதனால் அம்மையின் கொடுமை குறைவுபடாதென்று நம்புவதற்கு இதைவிட வேறு திருஷ்டாந்தமேன்? இவ்வாறாகத் தானாய் விளங்குகிற விஷயத்தை ருசுப்படுத்த இன்னும் எவ்வளவு உயிர்ச்சேதம் உண்டாகவேண்டும்?

முன்னதாய் அம்மைகுத்திக்கொள்வதனால் வைசூரிகாண்கிற காலத்தில் உயிர்கள் அநேகமாய்க் காப்பாற்றப்படுகின்றனவென்பதற்குத் திருஷ்டாந்தமாய், தொடர்வியாதி விசாரணைச் சங்கத்தாரின் ரிப்போர்ட்டினால் தெரிந்த சங்கதிகளை முன்னதாய்க் குறிப்பது மிகவும் நலமாயிருக்கும். ஏனெனில் அம்மைகுத்துவதனால் உண்டாகிற நன்மை இப்படிப்பட்டதென்று செம்மையாய்த் தெரிந்தாலல்லது, இந்தப் பட்டணத்தில் அந்த ஏற்பாடு செம்மையாய் ஸ்தாபிக்கப்படமாட்டாது.

1800—ஹுத்திற்கு முன்பட்ட 50 வருஷங்களுள், அம்மைமுத்தினின்றும் பாலெடுத்துக் குத்துகிறவழக்கம் இருந்தது. அக்காலத்தில் வைசூரி

யால் மரணம் 1000க்கு 96ஆக விருந்தது. மாட்டினின்றும் அம்மைப்பால் எடுத்துக் குத்துகிறவழக்கம் ஏற்பட்டபின் 50 வருஷங்களுள் 1000க்கு 35 ஆக குறைந்தது. 1803–வருஷத்தில் பலாத்காரமாய் அம்மைகுத்துவது ஏற்பட்டதனால் டேன்மார்க்கு, ஸ்வீடன் தேசங்களில் உண்டான நலமென்னவெனின், 20 வருஷகாலமாய் அம்மையினால் ஒரு மரணங்கூட அந்த ராஜ்யங்களில் கிடையாது. ஜர்மனியைச்சார்ந்த பலராஜ்யங்களில் அம்மை குத்துவது ஏற்படுவதற்குமுன்பு நடந்துவந்த மரணவீதம் 1000க்கு $66\frac{1}{2}$ ஆகவும், பின்பு 1000க்கு $7\frac{1}{4}$ ஆகவும் இருந்தது. அம்மைகுத்துவதைப் பலாத்காரமாய் ஏற்படுத்திய தேசங்களில் உண்டாகும் மரணவீதம், அதை ஜனங்களின் இஷ்டப்படி விட்டிருக்கிற தேசங்களில் உண்டாகிற மரணவீதத்தைவிட மிகவும் குறைந்திருக்கிறது. வெஸ்டுபேலியா, ஸாக்ஸனி, ஹான்னிதி தேசங்கள், பொமிரேனியா, கீழ் ஆஸ்திரியா, பொஹீமியா, லாம்பார்டி, வெனிஸ், ஸ்வீடன், பவேரியா இந்த நாடுகளில் அம்மையினால் மரணவீதம் ஆயிரத்துக்கு 2 முதல் $8\frac{3}{8}$ வரையில் இருக்கின்றது.

சமாசாரம்.

க்ஷாமோபத்திரவம்.—இப்போது சம்பவித்திருக்கும் மஹா க்ஷாமத்தில் அன்னசாலைகள் ஏற்படுத்தி அநாத பரதேசி ஜனங்களைப் போஷிப்பதனால் நேரிட்ட செலவுக்காக இப்போது துரைத்தனத்தார் இரண்டரைக் கோடி ரூபாய் கடன்வாங்குவதாகத் தீர்மானித்திருக்கிறார்கள். கடன் கொடுப்பவர்களுக்கு வருஷவாரி நூற்றுக்கு நான்குவீதம் வட்டி கொடுக்கப்படும். கடன்கொடுக்கச் சம்மதமுடையவர்கள் தங்களுக்கு இயன்ற தொகையை ஒரேதடவையாய்க் கொடுக்கக்கூடாமற்போனபோதிலும், வருகிற நவம்பர்மீ்த்திற்குள் ஐந்துதடவையாய்ச் செலுத்திவிடலாம். கடன்பத்திரம் பிறப்பித்துக் கொடுக்கிறவரையில் அவரவர்கள் கொடுத்த பணத்துக்கு ஆதாரமாக ரசீதுச் சீட்டொன்று கொடுத்துவைக்கப்படும்.

க்ஷாமத்தினால் இப்போது துரைத்தனத்தாருக்கு நேரிட்டிருக்கிற பெருஞ்செலவில் முக்காலே மூன்றுவீசமும், அங்கங்கே ஏற்பட்ட பல மேலதிகாரிகளுக்கும், அன்னசாலை விசாரணைக்காரர்களுக்கும், இன்னும் அநேகச் சிப்பந்திகளுக்குமே உபயோகப்பட்டனவென்றும், வீசம் பங்குதான் பரதேசி ஜனங்களின் வயிற்றுக்கு எட்டியிருக்குமென்றும், வெகுவாய் வதந்திகள் உண்டாயிருக்கின்றன. இனி அதிகமாய் அன்னசாலைகளில் நாட்டுஜனங்களைச் சேர்த்துக்கொள்வதில்லை. சிலநாளைக்கு முன் ஆனைகெவினிக்கடுத்த அன்னசாலையில் சேரும்படிவந்த பல மெலிந்த ஜனங்களை, நோயாளிகள் என்று தெரிந்து வைத்தியசாலைக்கு அனுப்பிவிட்டார்கள்.

இப்போது மழைபெய்து அநேகவிடங்களில் ஒருவாறு ஜலசமிர்த்தியுண்டாயிருப்பதனால் அந்தந்த ஊர்க்குடிகளுக்கு அங்கங்கேயே, கொஞ்சம் வயதுசென்றவர்களுக்குத் தலைக்கு தினம் 1 அணா 2 பை வீதமும், பனிரண்டு வயதுக்குட்பட்ட சிறுவர்களுக்கு 6–பை வீதமும், கொடுக்

கும்படியாகவும், அந்தந்த கிராமத்தலைவன் அவர்களின் பெயர்ப்பட்டிக் கணக்கை எழுதிவைத்துக்கொண்டு மேல்விசாரணைக்காரர்கள் வரும்போது அவர்களுக்குக் காட்டும்படியாகவும் உத்தரவு உண்டாயிருக்கின்றது. இன்னும் பஞ்சம் அதிகமாகி தானியவிலை அதிகரிக்கும்பக்ஷத்தில் அந்தந்த கிராமத்தார் அச்செய்தியைக் கலெக்டருக்குத் தெரியப்படுத்தினால் குடிகளின் வரும்படி கொஞ்சம் உயர்த்தப்படுமாம். இத்தன்மையான ஏற்பாடு ஆதியிலே ஏற்பட்டிருக்குமானால், துரைத்தனத்தாருக்குக் கடன் இவ்வளவு அதிகமாகாமலிருப்பதுந்தவிர, குடிகளுக்கு விசேஷ க்ஷேமமும் கிடைத்திருக்கும் என்பதற்குச் சந்தேகமேயில்லை; எதுவும் அனுபவித்த பிறகுதான் தெரியவரும் என்பதற்கு இதுவே ஒரு பெரிய அத்தாட்சியாம்.

துரைத்தனத்தார் அதிக வரியேற்படுத்தித் தங்களுக்கு நேர்ந்த செலவைத் தற்காலத்தில் குடிகளிடத்தினின்றும் வசூல்செய்யாமற்போனபோதிலும், அவர்கள் கடன்வாங்க முயன்றதையே மேல்வருஷத்திலாவது வரி அதிகரிக்குமென்பதற்கு நாம் ஒரு அறிகுறியாகக்கொள்ளலாம்.

ருஷியதுர்க்கியர் சண்டை.—ருஷியர் துருக்கியர்மேல் நெடுநாளாய்ப் படையெடுத்திருந்தபோதிலும் இன்னும் கைகலக்கும்படியான தருணம் வாய்க்கவில்லை. ருஷியர் ஐரோப்பாவுக்குத் தென்கிழக்கே சிற்றாசியாவுக்கடுத்த சில பட்டணங்களைக் கைக்கொண்டார்கள். அவை ஒருவருடைய ஆட்சியிலும் சம்பந்தப்பட்டனவல்லவாகையால் அதற்காக ஒருவரும் போராடவில்லை. எதிரிகள் பலவந்தமாய் மேலேவந்து வீழ்ந்தால் நாம் சண்டைசெய்வோமென்று துருக்கர் சுவரக்ஷணத்திற்குவேண்டிய முயற்சிகள் செய்துகொண்டிருக்கிறார்கள். தமது தேசத்திலுள்ள பிரதானபட்டணங்களில் தளங்களை ஸ்தாபித்து அவைகளைப் பலப்படுத்துகிறார்கள். இப்படிச் செய்வதனால் அவர்களுடைய மூலபலத்திற்குக் குறைவு நேரிடும்போலே காண்கிறது. சிலநாளாய் ருஷியர் டான்யூப் நதியில் பிரவாஹம் குறைவுபட்டபிறகு அதைக் கடந்துசெல்லலாமென்று எதிர்பார்த்திருந்தார்கள். அப்படியிருக்க அவர்களுடைய எண்ணத்திற்கு விரோதமாய் வரவர மேல்வெள்ளம் அதிகமாக வந்துகொண்டிருக்கின்றது. தமக்குச்சார்பாய் ஒருவரும் சேராமையால் ஏதாவது ஒரு சாக்கிட்டுச் சமாதானமாய்ப்போவதே அவர்களுடைய கருத்தென்று தோன்றுகிறது. ஒரு செய்தியும் உண்மையாய்த் தெரியவில்லை. ஒருவர் சொல்வதற்கு மற்றொருவர் சொல்வது மிகவும் விரோதமாயிருக்கின்றது. ஆயினும் தெரிந்தவரையில் ஜயாபஜயம் இருதிறத்தார்க்கும் பொதுவாகவேயிருக்கின்றது. கடைசியில் எப்படியாகுமோ தெரியாது.

இதைப் பதித்துவருகையில் மின்தபால் மூலமாய் வந்த செய்தியால் ஆசியாகண்டத்தின் நாடுகளில் ருஷியர் பின்னிடைகிறார்களென்றும் மேற்கில் டானியூப் நதியைத்தாண்டி மேலிட்டுவருகிறார்களென்றும் தெரியவருகிறது. ஆகிலும் கூலிக்கு மாறடிக்கிற ருஷியப்படையாள்கள் மதாபிமானத்தோடு போராடுகிற துருக்கியருக்குப் பின்னிடுகிறது அதிசயமல்ல.

Printed at the C. K. S. Press.



SOUTH AMERICAN OSTRICH.

தீக்குருவி.